ஸ்ரீ சர்வம் சக்தி மயம்



# ஸ்ரீ துர்கா, லஷ்மி, சரஸ்வதி திருக்கோவில்

46, ராமச்சந்திரா தெரு, சந்தோஷ் நகர், மதனந்தபுரம்,
போரூர், சென்னை - 600 125. போன் : **24826224**
**Visit us at : www.uniquetemple.org.in**

## ஸ்ரீ சரஸ்வதி தேவி ஏகதின லட்சார்ச்சனை

## 25-02-2018 ஞாயிற்றுக்கிழமை

அன்புடையீர்

வெள்ளை உடை உடுத்தி, வெண்தாமரை மீதமர்ந்து தூய்மையும், ஞானதேஜசும் பொங்கிநிற்கும் சரஸ்வதி தேவியை மும்மூர்த்திகளும் வணங்கி நிற்பார். மந்தபுத்தியைத் தனது புன்னகையால் மாற்றும் சக்தி கொண்ட தாய் சரஸ்வதி. படிப்புடன் சகல வித்தைகளையும், உத்தியோகத்தில் பதவி உயர்வையும், தம்பதிகளிடையே அந்யோந்யத்தையும், நாவில் அமர்ந்து நல்ல நாவன்மையையும் கொடுப்பவள் சரஸ்வதி தேவி.

மாணவ, மாணவிகள் பரீட்சையில் நல்ல மதிப்பெண்கள் பெற வேண்டி. நம் பகுதி திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீ சரஸ்வதி தேவிக்கு** நிகழும் **ஹேவிளம்பி** ஆண்டு **மாசி மாதம் 13-ம் தேதி (25-02-2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி** முதல் ஏகதின லட்சார்ச்சனை நடக்க இருக்கிறது. ஆகவே ஆன்மீக அன்பர்கள் அனைவரும் லட்சார்ச்சனையில் பங்கு பெற்று உள்ளன்போடு வணங்கி ஞானச்செல்வம் மற்றும் சகல சௌபாக்கியங்களையும் பெற வேண்டுகிறோம்.

03-01-2018

**லட்சார்ச்சனை கட்டணம் ரூ.200/-**

**இந்த ஆலயத்தின் உறுப்பினராக சேர விரும்பும் மெய்யன்பர்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்**

இப்படிக்கு
**மதனந்தபுரம் பக்தஸமாஜம்**
சென்னை - 600 125.